இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,342, NOVEMBER 26, 1909.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation of Rules framed by the Irrigation Committee of Puttalam.]

பெரிய பிரித்தானியும் அயர்லாந்தும் ஆகிய இராச்சியத்துக்கும், கடல்களுக்கு அப்பாலுள்ளவைகளாகிய பிரித்தானிய அதிபத்திய நாடுகளுக்கும், இராசாவும் சமய பரிபாலகரும் ஆகிய மகத்துவ நாயக ஏழாம் எட்வாட் அவர்களின் நாமத்தினாலே :

மிகமேன்மைபொருந்திய சென்ற் மைக்கேல் அன் சென்ற் ஜோர்ஜ் என்னும் வரிசையின் கிறன்ட் குறோஸ் தரிக்கப்பட்டவர்த்தனரும், மகத்துவ நாயக இராசாவின் எடிக்காங் படைத்தலைவரும் இலங்கைக்கும் அதனைச்சார்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய சேர் ஹென்றி மெக்கலம் அவர்கள் செய்யும்

## விளம்பரம்.

ஹென்றி மெக்கலம்,

1906 ஆண்டின் (16 வது) நீர்ப்பாய்ச்சல் சட்டத்தின் 8 ம் பிரிவிற் சொல்லிய பிரகாரம் நெல்வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சவும் வயல்கள் விதைப்பதற்காகவும் முன்வழமைகளை ஸ்திரப்படுத்தும்பொருட்டு வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்திரிக்கின் நீர்ப்பாய்ச்சல் சங்கத்தால் செய்யப்பட்டு இத்துடன் அணைத்திருக்கும் அட்டவணையில் வெளிப்படுத்திய கட்டளைச்சட்டங்கள் வடமேல் மகாணம் அரசாட்சி ஏசென்டரால் மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவின்படி எமக்குக் கொடுக்க அல்லது தள்ளிவிடுகிறதற்காக தேசாதிபதி அவர்களுக்கு அனுப்பியிருப்பதாலும், அவ்வண்ணமே அதிகாரமந்திர சபையாரது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாலும் :

இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் மேற்படிச் சட்டத்தின் 20 ம் பிரிவினால் நம்மிடத்து வைத்த தத்துவத்தினால் இத்துடன் அணைத்திருக்கும் அட்டவணையில் காணும் கட்டளைச்சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதை இத்தால் அறியத்தருகிறோம். அதைச் சகலரும் அறியக்கடவார்கள்.

எங்கள் ஆண்டவரின் ஆயிரத்துதொளாயிரத் ஒன்பதாம் ஆண்டின் நொவெம்பர்மீ இருபத்துமூன்றுந் தேதியாகிய இத்தினத்தில் கொழும்பில் கொடுக்கப்பட்டது.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,

ஹியு கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

இராசாவைக் கடவுள் காப்பாராக.

---

### சொல்லிய கட்டளைச்சட்டங்கள்.

1. இந்தச்சட்டங்களுக்கு விரோதமில்லாமலும் இதில் சொல்லப்படாமலுமிருக்கும் நெல்விதைப்பைப்பற்றிய இப்போது நடைபெற்றுவரும் வழமைகளிருந்தால் அவைகள் இந்தச்சட்டங்கள் போலவே அனுசரிக்கப்படும். அன்றியும் இதின்பாகம்போல் கவனிக்கப்படும்.

2. குடிச்சனங்களுக்குடைய காணிகளுக்கு தண்ணீர் ஏற்றுகிறதற்காக இருக்கும் குளங்கள் வெட்டாறுகள் வாய்க்கால்கள் தண்ணீர்வழிகள் அல்லது தண்ணீர் ஏற்றுகிறதற்காயிருக்கும் வேறு இடங்கள் பழுதடாக்கவும் சீர்திருத்தவும் காப்பாற்றவும் தேவைப்படும் வேலைகள் உதவி அரசாட்சி ஏசென்றுதுரையால் நியமிக்கப்படுகின்றபடிசெய்வது சரீரசவுக்கியமுள்ள ஒவ்வொரு மனுஷனுடைய கடமையாயிருக்கும், இப்படி வேலைசெய்யும் காலம் அமுனக்கணக்கின்படி ஒவ்வொரு வருஷத்திற் 30 நாளைக்கு மேல்படாது. ஒவ்வொரு அமுனத்தின் பங்குக்குச் செய்யவேண்டிய வேலை நாட்கள் ஒவ்வொரு பங்கின் பிரகாரம் நியமிக்கப்படும்.

ஆனாலும் சொந்தக்காரர் வேலைசெய்கிறதற்கு பதிலாக பணங்கொடுத்து விடுதலையாக விரும்பப்படுவார்களேயாகில், நாளொன்றுக்கு ஒரு ஆள் வேலைக்கு சதம் (50) ஐம்பது வீதம் கணக்குப்பார்த்து அப்பணத்தை வருஷத்தின் ஆனி மாதம் 30 ந் தேதிக்கு முன்பதாக கொடுக்கவேண்டியது.

3. முன்சொல்லப்பட்டபடி வருஷத்தில் செய்யவேண்டிய சாதாரணமான வேலையுடன் அவசியமாகச் சடுதியில் செய்யவேண்டிய பழுதுபார்க்கும் வேலை அல்லது நடக்கவிருக்கும் அழிமானத்தை காத்துக்கொள்ள செய்யவேண்டிய வேலைகளிருக்கு தென்று உதவி அரசாட்சி ஏசென்றுதுரைக்கு அல்லது அவரின் கட்டளைபெற்றவருக்குத் தெரியவந்தால், ஒவ்வொரு பங்காளியும் தானும் அல்லது தனக்குபதிலாய் வேறொருவரை நியமித்தாகுதல் அவ்வேலை முடிவுபெறுமட்டும் நாள்தோறும் தவறுமல் செய்ய அல்லது செய்விக்கவேண்டியது.

4. ஒரு மகநு அல்லது ஒருவான், அல்லது ரூபாய் 1000 ம் அல்லது அதற்கு மேற்பட்ட செலவுகொண்ட நீடிக்கும் வேலை அரசாட்சியாரால் செய்யப்பட்டால் முன்சொல்லப்பட்ட சாதாரணமான வேலை எடுத்தலைவிருமடங்குபடுத்தப்படும்.

5. முன்சொல்லப்பட்ட வேலைசெய்யவேண்டிய காலமும் பிரமாணமும் உதவி அரசாட்சி ஏசென்றுதுரையால் அல்லது அதற்காக அவரால் நியமிக்கப்படும் வேறொருவராலாவது தீர்மானிக்கப்படும். அதையிட்டு தப்புஅடித்து பண்ணும் பிரசித்தம் அவ்வேலை செய்யவிருக்கும் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்பட்ட போதுமான பிரசித்தமாகக் கவனிக்கவேண்டியது.

6. விதைக்கிற காலம் துவக்கமுந்தி அக்காலத்தில் விதைக்க எண்ணியிருக்கிற வயல் சொந்தக்காரரில் அதிகமான பேர்கள் விதைக்கவிருக்கும் நெல்லின்வகை அல்லது வகைகளைப்பற்றியும் துவங்குகிற, முடிக்கிற, உழுகிற, விதைக்கிற காலத்தைப்பற்றியும் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது. அந்தத் தீர்மானத்தை ஒவ்வொரு பங்காளியும் ஏற்றுக்

கொள்ளவேண்டியது. பங்காளிகளில் யாராவது தீர்மானிக்கப்பட்ட நெல்வகையைத் தவிர வேறுவகை நெல்லை விதைத்தால், குறிக்கப்பட்ட தினங்களைத் தவிர வேறு தினங்களில் வயல் உழுது விதைத்தால் அவன் இந்தச் சட்டங்களை மீறினதின் நிமித்தம் தண்டனைக்கு உள்ளாவதும் தவிர அவனுடைய நட்டம் அவனே அனுபவிக்கவேண்டும். மற்றும் முளு பங்காளிகள் நெல்லு அறுத்து முடியுமட்டும் அவன் அவர்களுடன் காவல்காத்து வேலிகளின் வேலைகளை செய்யவும் வேண்டும். பங்காளிகள் முன் சொல்லப்பட்டபடி நடவாமல் தவறினால், குளத்து தலைமைக்காரருக்கு அப்படி அவர் அவர்களுக்காகச் செய்யத் தத்துவமுண்டு.

7. விதைக்கும் காலத்தில் வயல் சொந்தக்காரன் வராமல் அவனுடைய பங்கை விதைக்காமல் அசட்டைபண்ணினால் பங்காளிகளில் அதிகமான பேர்கள் நியமனம்பண்ணுகிறபடி மறுபங்காளிகளால் அல்லது அவர்களின் ஒருவரால் குத்தகைப்பணம் கொடாமல் அந்தக்காலத்துக்கு வேலைசெய்விக்க வேண்டியது. வயல் சொந்தக்காரனால் செய்ய வேண்டிய 2 ம் 3 ம் சட்டங்களில சொல்லப்பட்ட காரணங்களைத் தவிர சொந்தக்காரனால் செய்யவேண்டிய மறுவேலைகள் எல்லாம் அக்காலத்துக்கு வயல் விதைத்தவரால் செய்ய வேண்டியது.

8. விதைப்பு முடிந்ததின்பின் விதைக்க முழுவிசாலமும் விளைகிறதற்கு ஏதும் காரணத்தினால் தண்ணீர் போதாவிட்டால் விதைத்த வயல்களின் சொந்தக்காரரில் அதிகமான பேர் அந்த விசாலத்தின் எந்தப் பகுதியை விட்டுவிடவேண்டுமென்று தீர்த்துக்கொள்ள வேண்டியது. மீதியான பங்கில் விதைத்த பங்காளிகளின் தரைப்பிரமாணப்படிக்கு அவர்களுக்குள் பிரித்துக்கொள்ள வேண்டியது.

9. விதைப்பாடு துவங்குமுன் முழுவிசாலமும் விதைக்கத் தண்ணீர் போதாதென்று தெரியவந்தால், வயலில் எவ்வளவு வேலைசெய்யவேண்டுமென்று தீர்மானம்பண்ணும்பொருட்டு, வெல்விதானையால் ஒரு திகதி நியமித்து வயல் சொந்தக்காரருக்கு அறிவித்தல்பத்திரம் அனுப்பி அக்காலத்துக்குள் அந்தக் காரணங்களை தீர்த்துக்கொள்ள வேண்டும். அப்படியே தீர்மானித்துக்கொண்ட வயல் பங்கை அவர் அவர்களுக்கு உடைய தரைப்பங்குப்படி வயல் சொந்தக்காரருக்குள் பிரித்துக்கொள்ள வேண்டும். அப்படியே அறியக்கொடுத்ததின்பின் முன்சொல்லியபடி தீர்த்துக்கொள்ள வயல் சொந்தக்காரர் தவறினால் அவர்களுக்காக குளத்து உத்தியோகஸ்தன் தீர்த்துக்கொடுப்பார்.

10. ஒவ்வொரு சொந்தக்காரரும் தன்தனக்கு சொந்தமான அளவுக்கு அந்த வயலில் வேலி கட்டுகிறதற்கு சேர வேண்டும். மிருகங்களுக்கு பிரவேசிக்கக்கூடாத விதத்துக்கு பெலனுள்ள வேலிகட்டவேண்டும். விதைப்புசெய்யத் துவக்குமுன் முளுக்கமக்காரரும் வேலிகட்டவேண்டும். ஒவ்வொரு சொந்தக்காரரும் தன்பங்கில் தான் வேலைசெய்தாலும் செய்யாவிட்டாலும் மறுபங்குக்காரர் தன்னுடைய பங்கில விதைக்காவிட்டால், அந்தக்காலத்தின் விதைப்பு முடிந்து நெல் அறுக்குமட்டும் வேலியின் தன்பங்கை நல்ல நிலைபரத்தில் வைத்திருக்கவேண்டும்.

11. ஒவ்வொரு வயல் சொந்தக்காரனும் தன்னுடைய வெள்ளாண்மை அறுத்தாலும் அறுக்காவிட்டாலும் அந்த வயலின் வெள்ளாண்மை முழுதும் அறுக்குமட்டும் தன்னுடைய பங்கில் சரியான காவல்கொட்டு சரிபண்ணி தன்னுடைய பங்கைக் காவல்காத்துக்கொள்ள வேண்டும்.

12. ஒவ்வொரு சொந்தக்காரருக்கும் தன்னுடைய வெள்ளாண்மையை மிரிக்குமட்டும் தன்னுடைய வெள்ளாண்மை குமித்துவைக்க கமத்தில் பகுதி கொடுக்கப்படும். ஒவ்வொரு கமத்தின் எல்லா பங்காளிகளாலும் தன்னுடைய வயலின் பங்குப்படிக்கு கமத்தைச்சுற்றி பெலனுள்ள வேலி கட்டவேண்டும். எல்லாச் சொந்தக்காரரும் தங்களுக்குடைய வெள்ளாண்மை மிரித்து முடியுமட்டும் தனக்குடைய வேலிப்பங்கைகாத்து பராமரிக்கவேண்டும். ஆனால் வயல் பங்குக்காரன் கமத்தைவிட்டுப் போகமுன் அவனால் உடைக்கப்பட்ட வேலியை நல்லவிதமாய் புதுப்பிக்கவேண்டும்.

13. குளத்துக்கட்டில் எந்தப்பக்கத்திலும் வேலிபோடக்கூடாது.

14. எருமைமாடு சொந்தக்காரர்களெல்லோரும் விதைப்பு நடைபெறும் காலமுதல் நெல் முழுவதும் கொண்டுபோகுமட்டும் அவைகளை அப்பால் துரத்தி வயலிலிருந்து பவத்திரமான தூரத்தில் வைக்கவேண்டும். அந்த மாடுகளின் கழுத்தில் சாப்பைகட்டியிருக்கவும்வேண்டும். வேலியுடைக்கும் மோசமான மாடுகள் வேறு மாடுகளுடன் பிணைத்திருக்க வேண்டும். எருத்துமாடு, வெள்ளாடு, செம்மெறியாடு உடையவர்கள் பகல் காலத்தில் அம்மிருகங்களை மேச்சல்பண்ணி இராத்திரிகாலத்தில வயலிலிருந்து பவுத்திரமான தூரத்தில் கட்டி அல்லது பட்டியிலடைத்து வைக்கவேண்டும். வயலை அழித்து நெல்லை நஷ்டமாக்கும் ஊர்ப்பண்டிகளை வெடிவைத்து மச்சத்தை சொந்தக்காரருக்கு கொடுக்க வேண்டியது.

15. ஒவ்வொரு சொந்தக்காரனுக்கும் அவனுடைய நெல்விதைப்புக்காக வயலில் அவனவனின் பங்குப்படி தண்ணீர் கொடுக்கப்படும்.

16. குளமல்லாது வேறு தண்ணீர் சேகரிக்கப்பட்ட இடத்திலிருந்து தண்ணீர் பங்கிடுதல் குளத்து தலைமைக்காரனால் செய்யப்படும். குளத்து தலைமைக்காரனின் கட்டளை அல்லது அவரின் சம்மதம் இல்லாமல் வேறொருவர் தண்ணீரைப்பங்கிடுதல் அல்லது திறந்துவிடுதல் அல்லது வெட்டிவிடுதல் அல்லது வேறொருவிதமாய் பாவித்தல் தடையாயிருக்கும்.

17. தண்ணீர் பங்கிட்டு கொடுக்கும்பொழுது முதன்முதல் உயர்ந்த மட்டத்திலிருக்கிற வயல்களுக்குகொடுத்து அதன்பிறகு அவைகளிலிருந்து மறுவயல்களுக்கு கொடுக்கப்படும். தண்ணீர் பங்கிடுகிறதில் ஒருவருக்கும் நட்டம் வருவிக்கிறவிதமாய் பாவிக்கப்படாது.

18. எல்லாச் சொந்தக்காரருடைய சம்மதமின்றி ஒருவராவது நெல் விதைப்புக்குத்தவிர வேறு தேவைகளுக்கு தண்ணீர் எடுக்கக்கூடாது.

19. வயல்களுக்குள்ளிருக்கும் தண்ணீர் வழிகளும் வெட்டாறுகளும் அந்தந்தக் காணிச் சொந்தக்காரர்களால் நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும்.

20. எல்லாக் குளத்துக்கட்டுகளும் அதற்குச்சேர்ந்த காணி சொந்தக்காரருக்கு வயல் பங்குப்படி பிரித்து கொடுக்கப்படும். ஒவ்வொரு சொந்தக்காரரும் அவர்களுக்கு பாரம்கொடுக்கப்பட்டிருக்கும் பங்கை காடு செடிகள் துப்பரவுபண்ணி ஒவ்வொரு வளருஞ் செடிகளை வளரவிடாமலும் கறையான் புத்துக்கட்டாமலும் சொலப்புகளில் பழுதுகளில்லாமலும் புல்லு அடித்து மிரித்து நல்ல அந்தஸ்தில் வைக்கவேண்டும்.

21. சொந்தக்காரர்களின் அதிகமானபேர் குளத்தின் அலைகரை விதைக்க வேணுமென்று தீர்மானித்தால் உதவி அரசாட்சி ஏசெண்டுதுரையின் உத்தரவுப்படி செய்யலாம், அதிகமான பேர்களால் தீர்மானப்படாமலும் உதவி ஏசென்றுதுரையின் உத்தரவு பெறாமலும் ஒரு சொந்தக்காரராவது குளத்தின் அலைகரையை அல்லது குளத்தின் எந்தப் பக்கத்தையாவது விதைக்கக் கூடாது.

22. காணிச்சொந்தக்காரருடைய குளம் வெட்டாறு வாய்க்கால் அல்லது வேறு தண்ணீர் வழிகளில் மீன்பிடிப்பு சொந்தக்காரர் அல்லது அவர்களுக்காக வேலைசெய்பவர்களைத்தவிர வேறு ஒருவராவது செய்யக்கூடாது.

23. இந்தச் சட்டங்களுக்கு விரோதமாக வயல் சொந்தக்காரருக்கு அல்லது தண்ணீரைப்பற்றிய வேலைக்காவது நட்டம் வருவிக்கத்தக்க யாதொரு கிரியைகள் செய்யக்கூடாது.

24. ஒவ்வொரு சொந்தக்காரரும் அவரவருடைய காணிகளுக்காக அவரவரால் அறுக்கப்பட்ட நெல்வில் நூற்றுக்கிரண்டு வீதம் சுவர்ர் குளத்து தலைமைக்காரனுக்கு கொடுக்கவேணும்.

25. பெர்ன்புரப்பிப்பற்றில் காலபோகத்தின் காலத்தின் விதைப்பு குளங்கள் நிறைய முன்பாக துவங்குவதாலும், எவ்வளவு தண்ணீர் கிடைக்குமென்பது பெருமழை பெயுமட்டும் அறியக்கூடாததாலும் விதைக்கப்பட்டிருக்கும் முழு விசாலத்துக்கும் போதுமான தண்ணீர் உண்டோவென்றும் அறியக்கூடாததாலும், மழையின் பிறகு விதைக்கப்பட்டிருக்கும் வயல் முழுதுக்கும் தண்ணீர் போதாதென்று கண்டால், அந்தக்காலத்துக்கு விதைக்கப்பட்டிருக்கும் வயற் சொந்தக்காரரில் அதிகமான பேர் ஒவ்வொரு வயலிலும் எவ்வளவு விசாலம் விட்டுவிட வேணுமென்று தீர்மானித்துக் கொள்ளலாம்.

[By-laws under the Rural Schools Ordinance framed by the District School Committee of Trincomalee.]

## உபவிதிகள்.

1907 ம் ஆண்டின் கிராமப் பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் 19 ம் 20 ம் பிரிவுகளுக்கமைய திரிகோணமலை பள்ளிக்கூடப் பிரிவின் சங்கத்தாரால் A என் றடையாளப்படுத்திய இத்துடனிணைந்திருக்கும் அட்டவணையிற் காட்டப்பட்ட பள்ளிக்கூடக் குறிச்சிக்கென் றேற்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்கள்.

1. இவ்வுபவிதிகளில் "பையன்," "பெண்பிள்ளை," "பிள்ளை" யென்னுஞ் சொற்கள் இத்துடன் பின்னிணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையிற் குறிக்கப்பட்ட பிரிவுக்குள்ளடங்கிய ஒரு பிள்ளையைக் கருதுகின்றது.

"பெற்றோர்" என்னுஞ் சொல் ஓர் பிள்ளையின் பராமரிப்புக்காரனையும் பொறுப்பாளியையுங் கருதும்.

"சட்டம்" என்னுஞ் சொல் தற்போதைக்காக அதிகார மந்திராலோசனைச் சபையில் மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களால் அநுமதிசெய்யப்பட்ட உதவி நன்கொடைபெறும சட்டத்தைக் கருதுகின்றது.

"வரவு" என்னுஞ்சொல் சட்டத்தால் விதிக்கப்பட்ட பிரகாரம் ஒரு வரவிடாப்பில் பதிந்த முழு வரவைக்கொண்டதாய் சட்டத்தால் கூறப்பட்ட காலத்தின் வரவைக் கருதுகின்றது.

"பிரிவுசங்க" மென்னுஞ் சொல் திரிகோணமலைப் பள்ளிக்கூடப் பிரிவுக்கான பள்ளிக்கூடப்பிரிவுச் சங்கத்தைக் கருதுகின்றது.

"பள்ளிக்கூட" மென்னுஞ்சொல் இத்துடனிணைத்திருக்கும் B என்றடையாளப்படுத்திய அட்டவணையிற் குறித்துக் காட்டப்பட்ட பள்ளிக்கூடங்களைக் கருதும்.

"ஒரு பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள்" "நியாயமான மன்னிப்புகள்" என்னுஞ் சொற்கள் 1907 ம் ஆண்டின் கிராமப் பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் 20 ம் பிரிவிலுள்ள உட்பிரிவின் (1) (b) யில் காட்டியிருக்கும் கருத்தைக்கொள்வன.

"வித்தியாதரிசி" என்னுஞ் சொல் மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களால் நியமனம்பண்ணப்பட்ட ஒரு வித்தியாதரிசியைக் கருதுகின்றது.

2. ஆறு வயதுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயதுக்குக் கூடாததுமான ஒவ்வொரு பையனையும் பெண்பிள்ளையினையும் முகமதிய அல்லது தமிழரில் ஆறு வயதுக்குக் குறையாததும் பத்து வயதுக்குக் கூடாததுமான ஒவ்வொரு பெண்பிள்ளையினையும் பெற்றோர் அப்படிப்பட்ட பையனின் அல்லது பெண்பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள் பண்ணினாலொழிய அல்லது பள்ளிக்கூடத்துக்கு வராதிருக்க நியாயமான மன்னிப்பிருந்தாலொழிய அப்படிப்பட்ட பையனை அல்லது பெண்பிள்ளையை இத்தோடிணைக்கப்பட்டுள்ள B அடையாளமிடப்பட்ட அட்டவணையில் விவரித்திருக்கும் பள்ளிக்கூடமொன்றில் சேர்த்து படிக்கப்பண்ணவேண்டும். ஆனால் இரண்டு மைலுக்கு மேற்பட்ட தூரத்துக்கு அப்பாலுள்ள பள்ளிக்கூடத்துக்கு யாதொரு பையன் அல்லது பெண்பிள்ளை போகவேண்டியதில்லை.

3. ஒவ்வொரு பையனினதும் அல்லது பெண்பிள்ளையினதும் பள்ளிக்கூடத்திற் படிக்கவேண்டிய நேரம் அப்படிக்கொத்த வயதான பிள்ளைகளின் கல்விப்பயிற்சிக்காகச் செலுத்தப்படும் முழுநேரமாகவேயிருக்கும்.

4. ஆயின் எப்போதும் இவ்வுபவிதிகள் யாதேனும்—

(a) 1907 ம் ஆண்டின் கிராமப் பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் 21 ம் பிரிவிலுள்ள உட்பிரிவின் (d) இல் ஒழுங்குபடுத்தியிருக்கிறபடி சமயத்துக்குரிய பாடங்கள் கொடுக்கப்படும் நேரத்தில் பிள்ளைகளிராதிருத்தலைத் தடுக்காது.

(b) பிள்ளையினுடைய பெற்றோர் சேர்ந்த சமயகூட்டத்தால் சமய அநுசரிப்புக்கென்று பிறம்பாய் நியமித்திருக்கும் எந்த நாளிலும் எந்தப் பிள்ளையும் பள்ளிக்கூடத்துக்கு வர அவசியமாயிராது.

5. ஆயின் எப்போதும் 10 ம் 12 ம் வயதுக்கிடையிலுள்ள ஓர் பிள்ளை பிரிவுசங்கத்தின் திருப்திக்குதவுமையாய்ப் பிரயோகிக்கப்பட்டு அவன் அல்லது அவள் தற்போதுக்கான சட்டத்தால் விதிக்கப்பட்ட 3 ம் தரத்தில் வாசனையிலும், வாசகத்திலும், கணக்கிலும் D அடையாளப்படுத்திய அட்டவணையிற் காட்டப்படும் இரண்டாம் வகுப்பு மேல்பிரிவுக்கான சோதனையிற் சித்திபெற்றதாக ஓர் வித்தியாதரிசியிடமிருந்து செட்டிபிக்கேற் கைக்கொண்டிருந்தால் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தேவையிராது.

6. இவ்வுபவிதிகளை அல்லது இதின் எதனையேனும் அநுசரியாத அல்லது அசட்டைபண்ணும் அல்லது மீறும் ஒவ்வொரு பெற்றோரும் குற்றச்சாட்டுக்குள்ளானால் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கும் 20 ரூபாய்க்கு மேற்படாத தண்டனைக்குள்ளாவான். இன்னும் தொடர்ச்சியான குற்றத்துக்குள்ளானவனானால் ஒவ்வொரு நாளைக்கும் 10 ரூபாய்க்கு மேற்படாத கூடின தண்டனைக்குமுள்ளாவான்.

குறிப்பு.—பின்வரும் கிராமப் பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் பகுதிகள், இவ்வுபவிதிகளின் 1 ம் 4 ம் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறவை.

20 ம் பிரிவின் உட்பிரிவிலுள்ள (1) (b) ஒரு தகப்பன் உதவி நன்கொடை பெறுதற்காய்ப் பிரசித்த வித்தியாகர்த்தரால் பதியப்பட்ட ஓர் பள்ளிக்கூடத்தில் அல்லது உதவி நன்கொடைக்காக விண்ணப்பப்பத்திரம் ஆலோசனையிலிருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தில் அல்லது போதியதும் பொருத்தமுமான கல்விப்பயிற்சி கொடுக்க பிரசித்த வித்தியாகர்த்தரால அநுவதிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடத்தில் தன் பிள்ளை சரியாய் வரவாகிறதென்று அத்தாட்சிப்படுத்தினால், அல்லது பிரசித்த வித்தியாகர்த்தர் போதியதும் பொருத்தமுமானதென்று அதிகாரம்பண்ணக்கூடிய வேறு ஒழுங்குகளை தன் பிள்ளையின் கல்விப் பயிற்சிக்குச் செய்துவைத்திருக்கிறதாக அத்தாட்சிபண்ணினால், அல்லது தன் பிள்ளை பள்ளிக்கூடத்துக்குக் கட்டாயமாகப் போகிறதிலிருந்து விலக்கப்படவேண்டுமென்று பிரசித்த வித்தியாகர்த்தர் அங்கீகாரம்பண்ணிய அதிகாரபத்திரமொன்று காட்டினால் தன் பிள்ளையின் கல்விப் பயிற்சிக்காகப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குபண்ணியிருக்கிறதாக மதிக்கப்படுவான். ஆயின் அப்படிப்பட்ட பிள்ளையை பள்ளிக்கூடத்திற்குப் போகப்பண்ணு

மலிருக்கிறதற்கு நியாயமான சாட்சி உண்டென்று கோட்டாரின் திருத்திக்கு அத்தாட்சியண்ணினால், அப்படிப்பட்ட பள்ளிக்கூடத்துக்குத் தன் பிள்ளையைப் போகப்பண்ணுமலிருக்கிறதற்காக எந்தப் பெற்றாரும் குற்றவாளியாக்கப்படமாட்டார்கள். ஒரு தந்தை தன் பிள்ளை வியாதியால் அல்லது தவிர்க்கேலாத காரணத்தால் பள்ளிக்கூடத்துக்குப் போகிறதில்நின்று தடுக்கப்பட்டதாக அத்தாட்சிப்படுத்தினால் அவன் பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்குப் போகப்பண்ணுதிருக்க நியாயமான சாட்டுள்ளவனாக மதிக்கப்படுவான்.

உட்பிரிவு 21—சமயப் பாடங்கள் படிப்பிக்கும் எந்தப் பள்ளிக்கூடமும் பிரிவுசங்கத்தார் மறுவிதம் திருப்திப்பட்டாலேயொழிய பிரசித்திபெற்ற ஆங்கிலேய பாடசாலையெனக் கவனிக்கப்படமாட்டாது:—

(a) சமயத்துக்குரிய படிப்புகள் பள்ளிக்கூட நேர அட்டவணையில் காட்டிய நேரங்களில் மாத்திரம் கொடுக்கப்படுகிறதென்றும்;

(b) சமயத்துக்குரிய படிப்புகள் பள்ளிக்கூடச் சமயத்துக்குச்சேர்ந்த மாணுக்கரைத் தவிர மற்றச் சமயத்தாருக்கு பெற்றார் தடுக்கில் கொடுக்கப்படுகிறதில்லையென்றும்;

(c) சமயப் படிப்புக்குச் சேராத மாணுக்கர் சமயப் படிப்புக்கென நியமித்திருக்கும் நேரத்தில் வேறு படிப்புகளில் கையிட்டிருக்கிறார்களென்றும்;

(d) சமயத்துக்குரிய படிப்புகள் கொடுக்குமறையில் தங்கள் பிள்ளைக ளிருக்கிறதைப்பற்றி பெற்றார் தடைசெய்தால், அப்படியான படிப்புகள்கொடுக்கும் நேரத்தில் அப்படிப்பட்ட பிள்ளைகள் பள்ளிக்கூடக் கட்டடத்தின் வேறு பகுதியில் படிக்க விடப்பட்டிருக்கிறார்களோ அல்லது அப்படியான நேரத்தில் அவர்கள் சமுகமாயிருப்பது மன்னிக்கப்பட்டிருக்கிறதோவென்றும்;

(e) இந்தப் பிரிவிஞேர் பகுதி இங்கிலீஷ், சிங்களம், தமிழ்ப் பாஷைகளில் பள்ளிக்கூடத்தில் விளக்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோவென்றும்

பிரிவுசங்கத்தார் திருப்திப்பட்டாலொழிய, சமயத்துக்குரிய படிப்புகள் கொடுக்கும் யாதாமொரு பள்ளிக்கூடமும் பிரசித்த சுதேச பள்ளிக்கூடமாக நினைக்கப்படமாட்டாது.

மேற்சொல்லிய உபவிதிகள் திரிகோணமலைப் பள்ளிக்கூடப் பிரிவின் சங்கத்தாரால் 1909 ம் ஆடி மாசம் 4 ந் திகதி கூடிய கூட்டத்தில் உண்டாக்கப்பட்டது.

ஜீ. கூக்சன்,
அக்கிராசனர்.

---

A அட்சர அட்டவணை.

மேற்குறிக்கப்பட்ட துணைப்பிரமாணங்களில் குறித்துக் காட்டப்பட்ட பரப்பு.

திரிகோணமலை டிஸ்றிக்.

---

B அட்சர அட்டவணை.

பள்ளிக்கூட டாப்பு.

கொட்டியாபுரப் பற்று.
மூதூர் வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
மூதூர் றோமான் கத்தோலிக்கப் பள்ளிக்கூடம்.
சம்பூர் வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
கூனித்தீவு வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
மருதடிச்சேனை வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
தோப்பூர் அரசாங்கப் பள்ளிக்கூடம்.
பள்ளிக்குடியிருப்பு வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
ஈச்சிலம்பத்தை றோமன் கத்தோலிக்கப் பள்ளிக்கூடம்.
கிளிவெட்டி அரசாங்கப் பள்ளிக்கூடம்.
மேன்காமம் வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
மல்லிகைத்தீவு வெஸ்லியன் பள்ளிக்கூடம்.

தம்பலகமப்பற்று.
சின்னக்கிண்ணியா வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
பெரிய கிண்ணியா அரசாங்கப் பள்ளிக்கூடம்.
தாமரைவில்லு வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
உப்பாறு றோமன் கத்தோலிக்கப் பள்ளிக்கூடம்.
தம்பலகமம் வெஸ்லியன் பள்ளிக்கூடம்.

கட்டுக்குளம் கிழக்கு.
நிலாவெளி வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
கும்புறுபிட்டி வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
குச்சவெளி வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
திரியாய் வெஸ்லியன் பள்ளிக்கூடம்.
புல்மோட்டை அரசாங்கப் பள்ளிக்கூடம்.
தென்னமரவடி வெஸ்லியன் பள்ளிக்கூடம்.

கட்டுக்குளம் மேற்கு.
கோமரசங்கடவை அரசாங்கப் பள்ளிக்கூடம்.
மதவாச்சி அரசாங்கப் பள்ளிக்கூடம்.

---

[By-law framed by the Nawalapitiya Local Board.]

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்க லோக்கல்போட் சட்டத்தின் 56 (21) ம் பிரிவின்படி நாவலப்பிட்டி லோக்கல்போட் சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட துணைச்சட்டம்.

லோக்கல்போட் எல்லைக்குள் மலசலங்கழிக்கும்பொருட்டுப் பொதுப்பாவிப்புக்காக அமைக்கப்பட்ட கக்கூசில் அல்லது வேறு கட்டடத்தில், அல்லது இதற்காகச் சுற்றிஅடைக்கப்பட்ட ஓர் இடத்தில் அல்லது போக்குவரவுசெய்யுமிடத்தில், தெருவில், பாதையில், அல்லது வேறேவாதிடத்தில் எவராவது மலசலங்கழித்தால் தண்டனைக்குட்படுவார்கள்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

இராசாங்க விகிதர் கந்தோர்,
கொழும்பு, 1909 ஆம் நொவெம்பர் (கார்த்திகை)மீ 18 ந் உ.

ஹியூ க்லிவ்வோட்,
இராசாங்க விகிதர்.

[By-law framed by the Gampola Local Board.]

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்க லோக்கல்போட் சட்டத்தின் 56 (21) ம் பிரிவின்படி கம்பளை லோக்கல்போட் சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட துணைச்சட்டம்.

லோக்கல்போட் எல்லைக்குள் மலசலம் கழிக்கும்பொருட்டுப் பொதுப்பாவிப்புக்காக அமைக்கப்பட்ட கக்கூஸில் அல்லது வேறு கட்டடத்தில், அல்லது இதற்காகச்சுற்றி அடைக்கப்பட்ட ஓர் இடத்தில், அல்லாது போக்குவரவு செய்யுமிடத்தில், தெருவில், பாதையில் அல்லது வேறேதாவதிடத்தில் எவராவது மலசலங்கழித்தால் தண்டனைக்குட்படுவார்கள்.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,
ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1909 ம் ஹு நொவெம்பர் (கார்த்திகை)மீ 18 ந் உ.

---

[By-law framed by the Hatton-Dikoya Local Board.]

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்க லோக்கல்போட் சட்டத்தின் 56 ம் (21) ம் பிரிவின்படி தொப்பித்தோட்டம் டிக்கோயா லோக்கல்போட் சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட துணைச்சட்டம்.

லோக்கல்போட் எல்லைக்குள் மலசலங் கழிக்கும்பொருட்டுப் பொதுப்பாவிப்புக்காக அமைக்கப்பட்ட கக்கூஸில் அல்லது வேறு கட்டடத்தில், அல்லது இதற்காகச் சுற்றி அடைக்கப்பட்ட ஓர் இடத்தில், அல்லாது போக்குவரவு செய்யுமிடத்தில், தெருவில், பாதையில் அல்லது வேறேதாவதிடத்தில் எவராவது மலசலங்கழித்தால் தண்டனைக்குட்படுவார்கள்.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,
ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1909 ம் ஹு நொவெம்பர் (கார்த்திகை)மீ 18 ந் உ.

---

[By-law framed by the Matale Local Board.]

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்க லோக்கல்போட் சட்டத்தின் 56 (21) ம் பிரிவின்படி மாத்தளை லோக்கல் போட் சங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட துணைச்சட்டம்.

லோக்கல் போட் எல்லைக்குள் மலசலங் கழிக்கும்பொருட்டுப் பொதுப்பாவிப்புக்காக அமைக்கப்பட்ட கக்கூஸில் அல்லது வேறு கட்டடத்தில் அல்லது இதற்காகச் சுற்றி அடைக்கப்பட்ட ஓர் இடத்தில், அல்லாது போக்குவரவு செய்யுமிடத்தில், தெருவில், பாதையில், அல்லது வேறேதாவதிடத்தில் எவராவது மலசலங்கழித்தால் தண்டனைக்குட்படுவார்கள்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1909 ம் ஹு நொவெம்பர் (கார்த்திகை)மீ 18 ந் தேதி.

---

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No, 578, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிஸில்,
கொழும்பில், 1909 ம் ஹு நவம்பர்மீ 17 ந் உ.

1910 ம் ஆண்டு தைமாதம் 18 ந் தேதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிஸில், வடமாகாணத்து கவர்ணமேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் வொருத்தப்பிரகாரம், விற்கப்படும் அல்லது உரித்துமுடிவுசெய்யப்படும்.

19 காணித்துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திரிக்கின் தீவு கரைச்சிப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இல. 2,967. குறிச்சி—கரம்பன்.

| காணித்துண்டின் இல. | காணிப் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. பெ. | ஏக்கரொன்றுக்கு பாணிப்பு விலை. ரூ. |
|---|---|---|---|---|---|
| 10762 | ஊருண்டியும் இத்திதின்ற ஊருண்டியும் | அரசாட்சி | நெல்வயலுக்குத்தக்க | 0 2 16 | 16 |
| 10763 | ஷெ. | — | ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் | 0 0 16 | — |
| 10764 | ஷெ. | அரசாட்சி | நெல்வயலுக்குத்தக்க | 1 1 28 | 16 |
| 10765 | ஷெ. | — | ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் | 0 1 0 | — |
| 10766 | தென்கன்குளம் | அரசாட்சி | குளம் | 10 0 0 | — |
| 10811 | ஊருண்டியும் இத்திதின்ற ஊருண்டியும் | சின்னப்பு பெண் தங்கம் | தரிசு நிலம் | 0 3 36 | 16 |
| 10812 | ஷெ. | வேலன் கதிரன் | ஷெ. | 1 3 8 | 16 |
| 10813 | வெட்டுக்கேணி | அரசாட்சி | குளம் | 0 1 0 | — |
| 10814 | ஊருண்டியும் இத்திதின்ற ஊருண்டியும் | — | கடற்கரைநிலம் விடப்பட்ட நிலம் | 5 0 15 | — |
| 10815 | உயரத்தனைவில் | — | மேய்ச்சலுக்கு விடப்பட்ட நிலம் | 46 0 32 | — |
| 10816 | ஷெ. | — | ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் | 1 0 10 | — |
| 10817 | ஷெ. | அரசாட்சி | தென்னைக்குத்தக்க | 7 0 34 | 16 |
| 10818 | ஷெ. | — | ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் | 0 0 28 | — |
| 10819 | ஷெ. | அரசாட்சி | தென்னைக்குத்தக்க | 3 1 36 | 16 |
| 10820 | ஷெ. | — | ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் | 0 0 24 | — |
| 10821 | வெட்டுக்கேணி | அரசாட்சி | குளம் | 0 2 4 | — |
| 10822 | உயரத்தனைவில் | ஆர். கஸ்பார் | செய்கைபண்ணுத தோட்டம் | 1 0 26 | 16 |
| குறிச்சி—நாவற்கொக்கட்டியான். B. S. பிளான் இலக்கம் 42. கேள்விக்காரன்—வி. அப்பாபிள்ளை. | | | | | |
| 6a | நாவற்கொக்கட்டியான் காடு | அரசாட்சி | கட்டடத்துக்குத்தகுந்த நிலம் | 1 0 0 | 15 |
| 6b | ஷெ. | — | றோட்டுக்காக விடப்பட்டநிலம் | 0 0 13 | — |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவர்ண்மேந்து ஏசன்றிடமும் படங்களைப்பற்றி அளவு கந்தோரின் பெரியதுரை அவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,
ஹியூ கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

No. 579, N. P.

கொலோனியல் சக்கிறித்தார் ஆபிசில்,
கொழும்பில், 1909 ம் ஆு கார்த்திகைமீ 20 ந் உ.

1910 ம் ஆண்டு தைமாதம் 25 ந் தேதி, இயாழ்ப்பாணத்தில் தன் ஆபிசில் வட மாகாணத்து கவர்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்து முடிவுபண்ணப்படும்.

11 காணித்துண்டுகள், வட மாகாணத்து இயாழ்ப்பாண டிஸ்திறிக்கின் பச்சிலைப்பளி, பூநகரி வலிகாமம் கிழக்குப் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இல. 3,432. குறிச்சி—பெரிய பச்சிலைப்பளி.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 12593 | — | அரசாட்சி | அத்தத் துண்டில் அதிகம் பனைகளுண்டு | 30 | 0 | 38 | 18 |
| 12594 | கடற்கரை நிலம் விடப்பட்ட நிலம் | ஷெ. | — | 3 | 2 | 8 | — |
| 12595 | ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம் | ஷெ. | — | 0 | 1 | 0 | — |
| 12596 | ஷெ. | ஷெ. | — | 0 | 1 | 34 | — |
| 12597 | ஷெ. | ஷெ. | — | 0 | 1 | 35 | — |
| 12598 | — | எஸ். மரியான் | தென்னையும் பனையும் | 0 | 0 | 18 | 45 |
| 12593½ | எம். அந்தோனி | அரசாட்சி | மணல் தரவை | 0 | 3 | 18 | 18 |
| 12593¾ | — | மிக்கேல் பேதுருவும் ஞானப்பிரகாசம் மிக்கேலும் | அத்தத் துண்டில் பனைகளுண்டு | 1 | 0 | 24 | 18 |

பிளான் இல. 3,586. குறிச்சி—கவுதாரிமுனை.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 13352 | எஸ். அந்தோனிப்பிள்ளை | அரசாட்சி | தென்னைக்குத்தக்க | 4 | 0 | 19 | 18 |
| 13353 | றோட்டுக்காக விடப்பட்ட நிலம் | ஷெ. | — | 0 | 0 | 20 | — |

பிளான் இல. 3,050. குறிச்சி—கோப்பாய்.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 11844 | — | காலஞ்சென்றுபோன எ. மயில்வாகனம் | தென்னந்தோட்டத்திலொரு பகுதி (உரித்து முடிவு செய்கிறதற்காக) | 0 | 0 | 5 | 1000 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து ஏசன்றரிடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரை அவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

இயூ. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

No. 581, N. P.

கொலோனியல் சக்கிறித்தார் ஆபிசில்,
கொழும்பில், 1909 ம் ஆு நவம்பர் (கார்த்திகை)மீ 20 ந் உ.

1910 ம் ஆண்டு தைமாதம் 20 ந் தேதி, வவுனியாவில் தன் ஆபிசில், வட மாகாணத்து முல்லைத்தீவு கவர்ண்மேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது ஆட்சியில் விடப்படும்.

33 காணித்துண்டுகள், வட மாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் வவுனியா தெற்குத் தமிழ் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 2,829. பரசங்குளம். உரித்தாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10106 | ஆத்தியடிக்கமம் | கணபதிகாளி | நெல்லுக்குதவியவெளி நிலம் | 2 | 2 | 38 | 20 | 0 |

பிளான் இல. 3,479 கலநாட்டினகுளம்.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12959 | கல்லடிக்காடு | மனுவல்தம்பு | நெல்லுக்குதவிய காடு | 2 | 0 | 15 | 15 | 0 |
| 12960 | ஷெ. | சின்னத்தம்பிமயிலு | ஷெ. | 1 | 3 | 6 | 15 | 0 |
| 12961 | ஷெ. | எஸ். தாக்கிஇராயப்பன் | ஷெ. | 0 | 3 | 34 | 15 | 0 |
| 12962 | ஷெ. | சின்னத்தம்பி கதிராமு | ஷெ. | 2 | 0 | 10 | 15 | 0 |
| 12963 | ஷெ. | முருகர் கதிராமு | ஷெ. | 5 | 2 | 24 | 15 | 0 |
| 12964 | ஷெ. | மனுவல் சந்தியாகு | ஷெ. | 1 | 0 | 27 | 15 | 0 |

பிளான் இல. 3,528. செக்கடிபிலவு. உரித்தாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13189 | கரம்பைக்காட்டுநிலம் | சின்னையா கணபதிப்பிள்ளை | நெல்லுக்கேற்றகாடு | 6 | 1 | 30 | 16 | 0* |
| 13190 | ஷெ. | கார்த்திகேசு செல்லத்தம்பி | ஷெ. | 4 | 2 | 0 | 18 | 50* |
| 13191 | பாலையடிபிக்காணி | கந்தவனம் வயிரமுத்து | ஷெ. | 3 | 0 | 2 | 17 | 0* |
| *13192 | நாவலடிபிக்கரம்பைக் காடு | விளுசித்தம்பி தவத்தம்பி | ஷெ. | 3 | 0 | 8 | 16 | 50* |
| 13193 | நாவலடிபிக்காடு | ஷெ. | ஷெ. | 7 | 2 | 10 | 19 | 0* |
| 13194 | பாலையடிக்காடு | தம்பையாசிவகுருநாதபிள்ளை | ஷெ. | 8 | 0 | 28 | 17 | 0* |
| 13195 | மருதடிக்காடு | முருகர் சண்முகம் | ஷெ. | 4 | 0 | 18 | 18 | 50* |

பிளான் இல. 3,546. இறம்பைக்குளம். உரித்தாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரன் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13242 | குருமன்காட்டுநிலம் | தி. வஸ்தியாம்பிள்ளையும் மறவும் | தோட்டத்திற்கேற்ற காடு | 5 | 3 | 28 | 23 | 50* |
| 13243 | ஷெ. | — | றோட்டுக்குவிடப்பட்டது | 0 | 1 | 1 | — | |
| 13244 | பாலையடித்துண்டு | — | ஷெ. | 0 | 0 | 26 | — | |

* இக்காணித்துண்டுகளில் விலைபெற்ற மரங்களிருக்கின்றன.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர் | கேள்விகாரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 13245 | பாலையடித்துண்டு | ச. இராமுப்பிள்ளை | தோட்டத்திற்கேற்ற காடு | 3 3 12 | 21 0* |
| 13246 | டிை. | — | வாய்க்காலுக்கு விடப்பட்டது | 0 1 6 | — |
| | பிளான் இல. 3,554. புதுவூர். உரித்தாளி—முடி. | | | | |
| 13269 | பாலையடிக்காணி | உ. பி. அசனுலெவ்வை | நெல்லுக்கேற்ற காடு | 5 2 17 | 16 50* |
| 13270 | டிை. | அ. சேகுமுகம்மது | டிை. | 4 0 9 | 16 50* |
| | பிளான் இல. 3,559. பம்பைமடு. உரித்தாளி—முடி. | | | | |
| 13283 | மருதடிக்காடு | ஆரியர் வைகாவிப்பிள்ளை | நெல்லுக்கேற்ற காடு | 5 2 15 | 16 50* |
| 13284 | கட்டைக்காட்டு நிலம் | அனந்தர் கனகரத்தினம் | டிை. | 10 3 35 | 15 50* |
| | பிளான் இல. 3,561. பத்திரகாளிக்குளம். உரித்தாளி—விளுசித்தம்பி செல்லன். | | | | |
| 13288 | பத்திரகாளிக்குளத்து வயல் | — | வயல் | 0 3 34 | 30 0† |
| | பிளான் இல 3,561. இலுப்பைக்குளம். உரித்தாளி—முடி. | | | | |
| 13289 | நாவலடிக்காடு | அய்யம்பிள்ளை வேலுப்பிள்ளை | நெல்லுக்கேற்ற காடு | 5 3 18 | 16 50* |
| | பிளான் இல. 3,562. தெற்கிலுப்பைக்குளம். உரித்தாளி—முடி. | | | | |
| 13290 | நாவலடித்தறை | க. மரியாம்பிள்ளை | நெல்லுக்கேற்ற காடு | 2 0 31 | 20 0* |
| | பிளான் இல. 3,565. நாவற்குளம் உரித்தாளி—முடி. | | | | |
| 13298 | நாவலடிக்காணி | அ. விளுசித்தம்பி | தோட்டத்திற்கேற்ற நிலம் | 1 1 6 | 20 0 |
| 13299 | டிை. | — | பாதைக்காக விடப்பட்டது | 0 0 20 | — |
| | பிளான் இல. 3,569. தவசியாகுளம். உரித்தாளி—முடி. | | | | |
| 13307 | யார்க்காடு | ச. ஆறுமுகம் | குடியிருக்கஏற்ற வெளி நிலம் | 1 1 17 | 20 0 |
| 13308 | டிை. | — | பாதைக்காக விடப்பட்டது | 0 0 12 | — |
| | பிளான் இல. 3,571. அலகல்லுப்போட்டகுளம். உரித்தாளி—முடி. | | | | |
| 13311 | யார்காட்டுநிலம் | அ. விளுசித்தம்பி | குடியிருக்க ஏற்ற வெளி நிலம் | 1 0 36 | 25 0 |
| | பிளான் இல. 3,574. பட்டாணிச்சி புளியங்குளம், உரித்தாளி—முடி. | | | | |
| 13324 | விளாத்தியடிக்காடு | கப்புடையார் முகைதீன் | நெல்லுக்கேற்றகாடு | 2 1 3 | 20 0 |
| | பிளான் இல. 3,576. வயிரவர் புளியங்குளம். உரித்தா—முடி. | | | | |
| 13328 | புளியடிக்காடு | கந்தர் சுப்பிரமணியம் | நெல்லுக்கேற்றகாடு | 3 1 30 | 25 0 |

*இக்காணித்துண்டுகளில் விலைபெற்ற மரங்களிருக்கின்றன.

†இது அருகதனம்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விவரங்கள் முல்லைதீவு அரசாட்சி உதவி ஏஜென்து துரையவர்களிடத்திலும் பிளான்களைப்பற்றி சர்வேயர் ஜெனரல் துரையவர்களிடத்திலும் கேட்டறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,

ஹியு கிளிவோட்,
இராசாங்க லிகிதர்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Nawela, Badulla District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நமுனகொலையில் அப்பொதாகரிக்கு ஒரு கட்டிடம்கட்ட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 1,498. சுரிச்சி—நாவெலெ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|
| N 160 | நமுனுகுலெ கடைத்தெருவு | கல்வீடம் தேயிலை தோட்டம் | சொந்தக்காரர் தொன கொம்ப தோட்டம் | 0 1 0·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு தக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்கிரப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்தப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஆண்டு டிசெம்பர்மாசம் 10 ந் தேதியென்று பகல் 12 மணிக்கு பதுளை கச்சேரியில் என்முன்பாக பவனிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்கக்கொள்ளப்படுகின்றது.

பதுளை கச்சேரி,
1909 ம் ஆண்டு நொவம்பர்மீ 16 ந் உ.

சி. ஆர். கம்பர்லான்ட்,
ஊவா அரசாட்சி ஏஜென்து.

[Kataluwa, Galle District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கத்தலுவை ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தைப் பெரிதாக்குவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அக்தாவது:—

பிரதம படத்து இலக்கம் 8,811. குறிச்சி—கத்தலுவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| C 602 | மோதரவத்தை | பழைய தென்னந்தோட்டம் | ஈ. ஆர். குணரட்ன முதலியாருக்கும் இன்னும் சிலருக்கும் | 0 1 9·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஆண்டு டிசெம்பர்மாசம் 14 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1909 ம் ஆண்டு நொவம்பர்மீ 18 ந் உ.

சீ. எம். லஷிங்டன்,
தென் மாகாண அரசாட்சி ஏஜண்டு.

---

[Hanwella, Badulla District.]

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வதுளை லோக்கல்போர்டுக்கு வேண்டிய கிரவல்குழிக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அக்தாவது:—

நிலஅளவை பிரதமபடத்து இலக்கம் 80. குறிச்சி—கன்வலை.

| துண்டு. | காணியின்து பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 22a | பெத்தகேதரகேன | சேன (கிரவல்குழி) | கி. கதுருவேல், கின்டகொடை | 0 3 13 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஆண்டு டிசெம்பர்மாசம் 21 ந் தேதியிலன்று 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1909 ம் ஆண்டு நொவெம்பர்மீ 22 ந் உ.

சீ. ஆர். கம்பர்லென்ட்,
உப அரசாட்சி ஏஜண்டு.

---

[Kontahela, Badulla District.]

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வண்டாரவளைக்கும் வெலிமடைக்கும் சந்தைரோட்டு தாககிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அக்தாவது :—

துண்டு அளவு B. S. பிரதம படத்து இல. 76. குறிச்சி—கொண்டஹெலெ.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| 11b | பாலகாகஅரவாகென | சேன, பத்தன | ஜீ. டபிள்யு. ஜீ. அப்புகாமியு மற்றவர்களும் | 0 0 4 |
| 11c | பாலகாகஅரவகெனவத்த | பிலா, கித்துல், வாழைமரம், 15 வருஷ மற்றபழவகைகள் | டோ. | 0 1 10¼ |
| 11d | பாலகாகஅரவெ அல்லது கல்கொடஉகநாவத்தயேன | சேனை | ஏ. ஜீ. புஞ்சிருல | 0 1 39½ |
| 11e | கல்கொடஉகனவத்தயேன | சேனை, பழைய பிலாமரம், 5 வாழையும் கித்துல் மரங்கள் | ஏ. ஜீ. செரிவந்த | 0 1 16½ |
| 11f | பூரனஅரவயேன | சேனை | எம். ஜீ. அப்புகாமி கமருல, எம். ஜீ. சிரிபண்டா | 0 1 24¼ |
| 11g | கல்கடியாலத்தயேன | சேனை | எச். இ. புஞ்சிமெனிகாவு மற்றவர்கள் | 0 0 8¾ |
| 11h | கல்கெட்டியாவத்த | வாழைமரம், சேனை | டோ. | 0 0 20½ |
| 11i | டெபிகாவத்த | பிலா, வாழைமரம், கித்துல், சப்பு, மரககறி | எம். அப்புகாமி கமருல | 0 0 8½ |
| 11j | கல்கொட்டியாவத்த | பிலா, வாழைமரம், கித்துல், கோப்பி | ஜீ. டபிள்யு. ஜீ. சிரிவந்தெ | 0 0 14¾ |
| 11k | புவத்தவலகொட்டுவ | வாழைமரம் | எம். ஜே. சிரிடெனெ | 0 0 19½ |
| 11l | கல்கெட்டியவத்த | பிலா, வாழைமரம், கித்துல், கோப்பி | ஜீ. டபிள்யு. ஜீ. சிரிவந்தெ | 0 0 5 |
| 11m | மெதவத்த | கித்துல், வாழைமரம், சப்பு, மரக்கறி | எம. ஜீ. கிரிபண்டாவு மற்றவர்கள் | 0 0 4½ |
| 11n | பிலவத்த | பலா, வாழைமரம், மரககறி | ஏ. ஜீ. புஞ்சிருல | 0 0 4¼ |

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|---|---|
| 11o | டஹுராகொட்டுவ | பலா, வாழை, கித்துல், மரக்கறி, வீடு | ஏ. கிரிவத்த | 0 | 0 | $22\frac{3}{4}$ |
| 11p | அம்பகஹவத்த | பலா, வாழை, பழையமரங்கள், கித்துல் | எம். அப்புகாமி கமரால | 0 | 0 | $22\frac{3}{4}$ |
| 11q | பககஅரவகொட்டுவ | பலா, வாழை, சேனை | எம். ஜே. கியாஹவு மற்றவர்கள் | 0 | 0 | $1\frac{1}{2}$ |
| 11r | உடஅரவயேன | சேனை, சதுப்புநிலம் | ஷை. | 0 | 0 | $11\frac{3}{4}$ |
| 11s | போகாஅரவயேன | சேனை, பத்தன | ஏ. ஜீ. பி. சுதுகாமி மற்றவர்களும் | 0 | 1 | 35 |
| 11t | பத்தனவத்தயேன | சேனை, 5 பலா, கித்துல், சப்பு மரங்கள் | ஏ. ஜீ. விதானே, ஏ. ஜீ. அப்புகாமி | 0 | 2 | 8 |
| 11u | ஷை. | சேனை, 5 பழைய பலா | ஏ. ஜீ. கிரிவத்த | 0 | 1 | 2 |
| 11v | பத்தனவத்தபத்தன | பத்தன, சேனை | ஷை. | 0 | 0 | 32 |
| 11y | கித்துல்காஅரவத்தயேன | சேனை, 5 துவக்கம் 8 வருஷம் | கெ. ஜீ. கஹநயிதெயு மற்றவர்கள் | 0 | 0 | 2 |
| 11z | கித்துல்காஅரவெஹுக்கல் | காடு 5 பலாமரம் | டபிள்யு. புஞ்சிநயிதெ, எம். கிரிவத்தெ | 0 | 0 | $12\frac{1}{2}$ |
| 11b1 | கித்துல்காஅரவயேன | சேனை பத்தன | ஜீ. கிரிவத்தெ | 0 | 0 | $10\frac{3}{4}$ |
| 11c1 | கண்டேயத்தயேன | சேனை 5 வருஷம் | எல். ஜீ. கிட்டாநயிதெ மற்றவர்களும் | 0 | 0 | 31 |
| 11d1 | கண்டேவத்தகெல | காடுகள் மற்றமரங்களும் | எல். ஜீ. கிட்டாநயிதெ | 0 | 0 | 13 |
| 11e1 | ஒலாக்குருவெலவத்தயேன | சேனை, காடு, 5 பலாமரம் | எல். ஜீ. கிட்டாநயிதெ, எல். ஜீ. அருமநயிதெ, எல். ஜீ. வைரம்பு | 0 | 1 | 34 |
| 11f1 | எலபித்தவத்த | பலா, கித்துல், வாழை, சப்பு | ஜீ. ஜீ. உதுகாமி | 0 | 0 | 9 |
| 11g1 | மகாவத்த | பழைய பிலா | எல். ஜீ. கித்தாநயிதெ, எல். ஜீ. அருமநயித்த | 0 | 0 | 16 |
| 11h1 | கெல்லதெனவத்த | பிலா, கித்துல், வாழை, சப்பு | எல். மல்காமி இரண்டுபேரும் | 0 | 0 | 17 |
| 11i1 | வொக்குருவெலவத்த | பிலா, கித்துல், வாழை, கோப்பியும் | எல். ஜீ. மெனிகஅப்பு | 0 | 0 | 2 |
| 11j1 | மகாவத்த | பிலா, கித்துல், சப்பு, வாழை, மரக்கறி | எல். ஜீ. கிட்டாநயித்த, எல். ஜீ. அருமநயித்த | 0 | 1 | 5 |
| 11k1 | வொருருவெல்லவத்தயேன | சேனை, காடு, 5 பிலா மரங்கள் | எல். ஜீ. கித்தாநயிந்த, எல். ஜீ. அருமநயித்த, எல். ஜீ. வைரம்பு | 0 | 0 | $23\frac{3}{4}$ |
| 11l1 | வொருருவெலவத்த | பிலா, பாகநு, கித்துல், சப்பு | எல். ஜீ. மெனிகஅப்பு, 6 பேரும் | 0 | 0 | $31\frac{1}{2}$ |

பிளான் அளவில் எடுக்கப்பட்டது பிளான் 116: கிராமம்—மெட்டிபிம்பியா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 103a | பலகஸ்எலயேன | சேனை, பத்தன | டம்பவின் ரட்டமாத்தையா, பாலவலவ்வ | 0 | 2 | $31\frac{1}{2}$ |
| 103b | வலவவத்தஹுகலான | காடு, மரங்கள் | ஷை. | 0 | 2 | 1 |
| 103c | வலவவத்தயேன | சேனை, காடு, 25 வருஷம் | ஷை. | 0 | 0 | $6\frac{3}{4}$ |
| 103d | ஹுலத்தயேன | சேனை, பத்தன, 4 வருஷம் | டம்பவின ரட்டமாத்தையா, உடகாவலவ் | 0 | 0 | 30 |
| 103e | ஹுலத்தபத்தன | பத்தன, சின்னகாடு | உரித்து நிலம் | 0 | 0 | $2\frac{3}{4}$ |
| 100a | ஹுலத்தயேன | சேனை | ஷை. | 0 | 0 | $2\frac{3}{4}$ |
| 102a | வலவவத்தயேன | சேனை, காடு, 25 வருஷம் | டம்பவின ரட்டமாத்தயா பாலவலவ் | 0 | 0 | $3\frac{1}{2}$ |
| 102b | வலவத்தஹுகலான | காடு, மரங்கள் | ஷை. | 0 | 0 | 7 |
| 102c | கெதரவத்த | பிலா, கித்துல், வாழை, கோப்பி, பழவகைகள் | ஷை. | 0 | 0 | $7\frac{3}{4}$ |
| 102d | கொட்அரலுவத்தயேன | சேனை, காடு, 6 வருஷம் | ஷை. | 0 | 0 | 17 |
| 102e | கெதரவத்த | பிலா, கித்துல், வாழை, கோப்பி | ரத்நாயக்க ஹுதியான்சலாகே பண்டா | 0 | 0 | $34\frac{1}{2}$ |
| 102f | ஹுலத்தவத்த | ஷை. வீடு | டம்பவின ரட்டமாத்தயா, உடகாவலவ | 0 | 0 | $33\frac{1}{4}$ |
| 102g | ஹுலத்தயேன | சேனை, பத்தன, 4 வருஷம் | ஷை. | 0 | 0 | 12 |

நிலஅளவுதுண்டு அளவுபிளான் துண்டு நொம்பர் 63, பீராவத்த கிராமம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 32a | மகஹுவத்தயேன | சேனை, கொஞ்சம் வாழை, கோப்பி | டம்பவின்ன குமாரிகாமி | 0 | 2 | 25 |
| 33a | மன்காடவத்தயேன | சேனை, பத்தன | ஷை. | 0 | 0 | $18\frac{1}{2}$ |

நிலஅளவுதுண்டு பிளான்துண்டு நொம்பர் 117, டிகனதென்ன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10a | உடுதுருபிதன | சேனை, சேரும், 6 வருஷம் | எம். கே. அங்கோநோனு | 0 | 0 | $20\frac{1}{4}$ |
| 10b | உடுதுருவத்த | தே, கோப்பி, மாங்காய், கிரவிலியா, சப்பு மரங்கள் 8 துவக்கம் 10 வருஷம் | ஷை. | 0 | 1 | $23\frac{1}{4}$ |
| 10c | பிஹுவன்வெலபத்தன் | பத்தன | எம். கெ. அஙகோநோனுவும் மற்றவர்களும் | 0 | 0 | 6 |
| 10d | உடுதுருவத்த | வாழைமரங்கள். சேனை | எம். கே. அங்கோநோனு | 0 | 0 | $1\frac{3}{4}$ |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் [illegible] கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1909 ம் ஆ டிசம்பர்மாதம் 20 திகதியன்று 12 மணிக்கு பீருவத்தையில் என்முன்பாக வெளிப்படுத்துதமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் [illegible] விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளை கச்சேரி,
1909 ம் ஆ கார்த்திகைமீ 23 ந் உ.

சீ. ஆர். கம்பர்லென்ட்,
ஊவா அரசாட்சி ஏசன்று.

( 2 )

## LAND RESUMPTION NOTICE.

அரசாட்சியார் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளும் காணி விளம்பரம்.

[Medamahanuwara, Kandy District.]

இத்துடன் அணைத்திருக்கும் டாப்பில் காட்டப்பட்டிருக்கின்றதும் மத்திய மாகாணத்து கண்டி டிஸ்றிக்கில் உடதும்பறை தெகியப்பத்துவின் மெதமகாநுவரை நாட்டில் இருக்கின்றதும், அரசாட்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதுமான 151 ஏக்கர் விஸ்தாரமுள்ள துண்டுக் காணி சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாகத் தோற்றப்படுகிறபடியாலும், கவனமாகவும் நியாயமாகவும் விசாரணைசெய்தும் அச்சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கப்படாமையாலும், இதனால் சகலரும் அறியவேண்டியது யாதெனில், மத்திய மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஜோன் பென்றி லூயிஸ் ஆகிய நான் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தின்படியும், அதியுத்தம தேசாதிபதியின் ஆக்ஞைப்படியும், 1910 ம் ஆண்டு நவம்பர்மாதம் 30 ந் தேதியில் அல்லது அதற்கு முன்பாக அக்காணியின் சொந்தக்காரரால் அல்லது உரித்தாளிகளினால் உரித்து ஸ்தாபிக்கப்படாவிட்டால், மேற்படி கட்டளைச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுமென்று விளம்பரப்படுத்துகிறேன்.

ஜே. பி. லூவிஸ்,
அரசாட்சி ஏஜன்றர்.

1909 ம் ஆல் நவம்பர்மீ 12 ந் உ.

---

குறிக்கப்பட்ட டாப்பு.

மத்தியமாகாணத்து உடதும்பறைப் பகுதியில் மெதமகாநுவரை யென்னுங் கிராமத்திலுள்ளதும் 49,533 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதும் கவிபோணியாத்தோட்டம் என்னும் பெயரையுடையதும் 151 ஏக்கர் விஸ்தாரமுள்ளதுமான மேவார் காணித்துண்டு. இதனெல்லைகளாவன: வடக்கு-பம்பறகம்மயா அல்லது கொட்டாலயாவும் ஊரவர்களின் காணியும்; கிழக்கு-49,905 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதும் காலக்கெலேதோட்டம் என்னும் பெயரையுமுடைய முடிக்குரிய காணி; தெற்கு-முடிக்குரிய காணி; மேற்கு-49,789 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதும் போம்புறைத்தோட்டமென்னும் பெயரையுமுடைய முடிக்குரிய காணி.

---

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Hambantota S. O. 94—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆல் நவம்பர் (கார்த்திகை) மீ 26 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்றுரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முசாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லியசட்டங்களால தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

அட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குக் கிறவாப்பத்து கிழக்கைச்சேர்ந்த சபுகாயாய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 394.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | பெ. |
|---|---|---|---|---|
| 11a | கெற்றகெலேகாவத்தை | 0 | 2 | 17 |
| 11c | கெற்றகெலேகாவத்தேயேன | 1 | 0 | 9 |
| 12 | போகாவத்தை | 1 | 0 | 18 |
| 23b | கெற்றகெலேகாவத்தேயேன | 1 | 2 | 4 |
| | | 4 | 1 | 8 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட காட்டகாயேன, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட போகாயேன; கிழக்கு-வீரக்குட்டிவிதாறனகே மத்துமஅப்பு உரித்துப்பேசும் கயுகாவத்தை, விதாறனகே தொன் சிமான் உரித்துப்பேசும் கெற்றகெலேகாவத்தை, வீரக்குட்டிவிதாறனகே மத்துமஅப்பு உரித்துப்பேசும் கயுகாயேன; தெற்கு-வீரக்குட்டிவிதாறனகே மத்துமஅப்பு உரித்துப்பேசும் பன்வேகாவத்தை; மேற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட காட்டகாயேன.

II.

பிரதம படம் 394.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | பெ. |
|---|---|---|---|---|
| 21a | கெற்றகெலேகாவத்தை | 0 | 1 | 20 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட நியங்கவலயாகொடெல்ல; தெற்கு-கமத்திகே சின்டபா உரித்துப்பேசும் கெற்றகெலேகாவத்தை; மேற்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட நியங்காவலயாகொடெல்ல.

*இக்கெசிற்றின் IV. ம் பாகம் 1654—1656 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

III.

பிரதம படம் 394.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 23p | மாறுகேவத்தேகால்ல | 0 1 14 |

எல்லைகளாவன : வடக்கும் கிழக்குந் தெற்கும் மேற்கும்-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட மாறுகாவத்தெகொடயேன.

IV.

பிரதம படம் 394.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 31k | போகாவத்தேயேன | 0 0 26 |

எல்லைகளாவன : வடக்கு-பாழ்நிலச் சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட மெத யேன ; கிழக்கு-விக்கிரமகே அனங்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் போகாவத்தேக்கால்ல ; தெற்கு-விதாறனகே டொனேறிஸ் உரித்துப்பேசும் கிக்காவத்தை அல்லது போகாவத்தை ; மேற்கு-ஓர் கன்சபாவப்பாதை.

